# திராவிடத்தால் வாழ்கிறோம்

849

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

122





# இராணி மேரி கல்லூரி விடுதி மற்றும் கல்விசார் கட்டடங்கள்!

## உயர் கல்வித்துறை உயரும் காலம்!

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் முதலிடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு. இந்தப் பெருமைக்குப் பின்னால், முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்த பல திட்டங்கள் காரணமாக அமைந்திருப்பதைப் புள்ளிவிவரங்கள் சொல்லும்.

மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில, 'புதுமைப் பெண்' திட்டம் மற்றும் மாணவர்கள் உயர் கல்வி பயில 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் என பல திட்டங்களின் கீழ் புதிய முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது அரசு. தவிர, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற திட்டங் களையும் தொடர்ச்சியாகச் செயல்படுத்தி வருகிறார், திராவிட மாடல் நாயகர், நம் முதலமைச்சர்.

### கல்லூரி வளாகத்திலேயே விடுதி

2022-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 22-ஆம் தேதி, சென்னை, இராணி மேரி கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார் முதலமைச்சர். 2011-ஆம் ஆண்டில், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஜெயலலிதா, இராணிமேரி கல்லூரியை இடித்துவிட்டு, அந்த இடத்தில் தலைமைச் செயலகம் கட்டத் திட்டமிட்டார். அதற்கு எதிராக மாணவிகள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தியபோது, அவர்களுக்கு ஆதரவாக நின்று, ஜெயலலிதாவின் திட்டத்தை நிறுத்தியவர் நம் கழகத்தலைவர், இன்றைய முதலமைச்சர். அந்த உரிமையில், அன்று, கல்லூரி வளாகத்தி லேயே தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக, விடுதி ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என மாணவிகள் முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர்.

அக்கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்டு, விழா மேடையிலேயே விடுதி கட்டித் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி, சென்னை, இராணி மேரி கல்லூரியில் 42 கோடி ரூபாய் செலவில், நவீன வசதிகளுடன் 455 மாணவியர் தங்கிப் படிக்கும் வகையில், உயர்கல்வித்துறை சார்பில் விடுதி கட்டி முடிக்கப்பட்டது. அந்த விடுதியினை 2025 மே மாதம் 20-ஆம் தேதி, திறந்து வைத்து முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த விடுதி, மாணவிகள் தங்கும் அறைகள் தவிர, கருத்தரங்க அறை, மின்தூக்கிகள், சி.சி.டி.வி. கேமராக்கள், நவீன சமையல் அறை, உணவு அருந்தும் கூடம், தேவையான மருத்துவச் சேவையினை மாணவிகள் பெறு வதற்கு ஏற்ப மருத்துவர் அறை என அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராணி மேரி கல்லூரி வளாகத்தில் கட்டப்படவுள்ள கலையரங்கத்திற்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.



இவைத் தவிர, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கல்லூரிகளில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள கட்டடங்களையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிய கட்டடங்கள்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில், கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் மற்றும் 3 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஒரு கழிவறைத் தொகுதிக் கட்டடம்.

கிருஷ்ணகிரி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப் பறைகள், 5 ஆய்வகங்கள், 2 பணிமனைகள் மற்றும் 2 கழிவறைக் கட்டடங்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி, அரசு பொறியியல் கல்லூரியில் ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய ஆய்வகம், ஒரு பணிமனை மற்றும் 2 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்.

கடலூர் மாவட்டம், கூடுவெளி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் ஆய்வகக் கட்டடம் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம்.

தூத்துக்குடி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 2 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வகுப் பறைக் கட்டடங்கள் மற்றும் ஒரு ஆய்வகக் கட்டடம்.

சென்னை பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் 28 கோடியே 5 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள்.

பெரம்பலூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்.

சிவகங்கை அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஆய்வ கங்கள் மற்றும் பெண்களுக்கான கழிவறைக் கட்டடம்.

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 25 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு திருமகள் ஆலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள்.

தென்காசி மாவட்டம், சுரண்டை, காமராஜர் அரசு கலைக்கல்லூரியில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்.

என அரசு கல்லூரிகளில் மொத்தம் 120 கோடியே 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட உயர்கல்வித் துறை கட்டடங்களையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். கலைஞர் அமைத்த அடித்தளத்தில், உயர்கல்வித்துறையை உயர்த்திக் கொண்டிருக்கிறார் நம் திராவிட மாடல் நாயகர். பட்டங்கள் சிறக்கட்டும்!

> **கலைஞர் அமைத்த அடித்தளத்தில், உயர்கல்வித்துறையை உயர்த்திக் கொண்டிருக்கிறார் நம் திராவிட மாடல் நாயகர். பட்டங்கள் சிறக்கட்டும்!**

...சாதனை தொடரும்

## கீழடி : உண்மைகளை உரக்கப் பேசுவோம்!

தமிழர்களின் தொன்மை நாகரிகமான கீழடி குறித்து, அகழ்வாய்வு மேற்கொண்டு, இந்திய தொல்லியல் துறைக்கு அறிக்கை சமர்ப்பித்து, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை அந்த அறிக்கையை வெளியிடாத தொல்லியல்துறை, இப்போது அறிக்கையில் திருத்தம் செய்து தர வேண்டும் என ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணனைக் கேட்டுக்கொண்டுள்ளது, விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

கீழடியில் பல ஆண்டுகள் அகழாய்வுப் பணிகளை நடத்தி, அறிவியல்பூர்வமான தடயங்களையெல்லாம் சேகரித்து, அவை அனைத்தையும் மக்கள் பார்வைக்கு வைத்து, முறையான ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தால், அதனைத் திருத்தும்படி சொல்வது எவ்வளவு பெரிய மோசடி என சமூக வலைத்தளங்களில் கண்டனம் வலுத்துள்ளது.

கீழடி ஆய்வின் அடிநாதமாகத் திகழ்கின்ற தமிழர் தொல்குடி நாகரிகத்தைத் திருத்தி, ஆரிய (சிந்து சரஸ்வதி) நாகரிகம் என்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று திருப்பி அனுப்புகிறார்களா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

தொல்லியல் துறைக்குப் பதில் அளித்துள்ள, ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன், 'கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளது' என்றும் தொன்மை அறிவியல் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, கி.மு 800 முதல் கி.பி.500 என உறுதி செய்யப்பட்ட பிறகே அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே திருத்தம் தேவையில்லை என்றும் அவரது கடிதத்தில் அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பொய்களையும் புரட்டுகளையும் மட்டும் வைத்துக்கொண்டு எல்லா உண்மைகளையும் மறைத்துவிடலாம், திரித்துவிடலாம் என்று நம்புகிறார்கள். அதற்காக நூற்றாண்டு கடந்தும் ஆரியர்கள் முயற்சித்துக்கொண்டே இருக்கிறார்கள். உண்மைகளை உலகறியச் செய்வோம்! உரத்துப் பேசுவோம்!

## ஃப்ளாஷ்பேக்



### கருப்புச் சட்டை கால நண்பர்!



அலிஷேக் மீரான்

என் தந்தை ஏர்வாடி அலிசேக் மன்சூர் நெல்லை கழக முன்னோடி. கலைஞருடன் பயணித்தவர். இந்தப் படம் 1955-ஆம் ஆண்டு, கலைஞர், நெல்லை மாவட்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, ஏர்வாடியில் நம்பியாற்றுக் கரையில் வைத்து எடுக்கப்பட்டது. கலைஞரின் வலது பக்கம் அமர்ந்திருப்பவர் எனது தந்தை மன்சூர். கலைஞரின் இடது பக்கம் அமர்ந்திருப்பவர் மதுரை முத்து. அதனை அடுத்து அமர்ந்து இருப்பவர், கலைஞரின் நண்பர் மாயவரம் காந்தி. 1994-ஆம் ஆண்டு நெல்லை சாப்டர் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலைஞர் பேசும் பொழுது, நான் கருப்புச் சட்டை போட்ட காலத்திலேயே என்னை அழைத்து கூட்டம் நடத்தியவர், எனது நண்பர் அலி ஷேக் மன்சூர் என்று குறிப்பிட்டார். படத்தில் உள்ளூர் கழகத் தோழர்கள் கோ. அ.மு.மீரான், மாம்சா அனிபா, எஸ்.என்.எம்.அலி, நவாப் மீரா சாஹிப், சோழவர் சுப்பையா ஆகியோர் உள்ளனர்.

**– அலி ஷேக் மீரான், பொறுப்பாளர், மும்பை புறநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம்லருக

### சென்னை விழாக்கோலம்!

1965-ஆம் ஆண்டு, தென்கிழக்கு ஆசிய நாடு களுக்குத் தமிழர்களின் அழைப்பின்பேரில், சென்று பல கூட்டங்களில் கலந்துகொண்டார் பேரறிஞர் அண்ணா. 12.08.1965 அன்று தாயகம் திரும்பிய அறிஞர் அண்ணாவை, சென்னையில் திரண்டு யானை, குதிரைகளில் கழகக் கொடி ஏந்தி வரவேற்பு அளித்தனர் கழகத்தினர். ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் அண்ணா அழைத்து வரப்பட்டார். சென்னை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131